மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் பூந்தமல்லியில் இருந்து ஆசிரியர்கள் வந்து என்னைச் சந்தித்தாக நினைவு இல்லை. பொதுவாக, முதலிலே அவர்களுக்குக் கொடுக்கப் பட்ட படி அவர்களுக்குப் போதுமானதாக இல்லையென்று குறிப்பிட்டதன் பேரில் ஓரளவு தற்போது உயர்த்திதரப்பட்டிருக்கிறது. எவ்வளவு என்ற விவரம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : டைரக்டர் ஆப் எக்ஸாமினேஷன்ஸ், கமிஷனர் என்ற அடிப்படையில் சென்னையில் மட்டுந்தான் இருக்கிறார்கள். ரீஜனல் கமிஷன் மதுரையில் அமைக்கும் குறிப்பு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாநிலம் முழுவதும் இரண்டு பல்கலைக் கழகப் பகுதிகளும் சேர்ந்து ஒரே இடமாக இருக்கும் காரணத்தால் ஒரே ஒரு கமிஷனர்தான் இருக்கிறார். மதுரைப் பல்கலைக்கழகம் வேறு, சென்னைப் பல்கலைக்கழகம் வேறு என்ற நிலை ஏற்படும்போது தனி கமிஷனர் ஏற்படுத்தலாம். அந்தப் பணிகள் விரிவடைந்து தனிக் கமிஷனர் தேவை என்ற நிலை ஏற்பட்டால் அப்போது இதுபற்றிப் பரிசிலனை செய்யலாம்.

திரு. இரா. இராமலிங்கம் : தங்கள் குழந்தைகளுக்கு அதிகமாக மார்க் வேண்டுமென்பதற்காக பெற்றோர்கள் சென்னையை நோக்கிப் படையெடுத்து வருகிறார்கள். அப்படி ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தொடர்பு இல்லாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் மைய அளவில் திருத்துகின்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எந்த விடைத்தாள் எந்த ஆசிரியருக்கு என்ன நோத்தில் வருகிறது என்பது இப்போது இருக்கும் முறையில் சொல்ல முடியாது. யாரையும் யாரும் அணுக வாய்ப்பு இல்லை.

National Seminar on Pre-School Children.

*501 Q.—Thiru N. Dennis : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether any National Seminar on pre-school children was conducted in Madras on or about the 19th December 1970; and

(b) if so, the details thereof.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இந்தியக் குழந்தை நலக் குழு Indian Council for child welfare என்னும் நிறுவனத்தாரால் 14—12—1970 முதல் 19—12—1970 வரை சென்னை ராஜாஜி மண்டபத்தில் பள்ளி செல்லுமுன் பருவமான்ன சிறுவர்களுக்கான (National Seminar for Pre-School Children) தேசிய கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. இதில் சம்பந்தப்பட்ட உலக சுகாதார நிறுவனம், உணவு, வேளாண்மை நிறுவனங்கள் போன்ற தேசிய, சர்வதேச ஸ்தாபனங்களின் முக்கிய பிரதிநிதிகளும், அரசு அலுவலர்களும் பங்கெடுத்துக் கொண்டனர். இதில் கலந்து கொண்ட பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகளும் பள்ளி செல்வதற்கு முன் பருவமுள்ள சிறுவர்களைப் பற்றிய எல்லாப் பிரச்சினை

களையும் விவாதித்தனர். தொடக்கக் கல்விக்கு முன்புகட்டப்பட வேண்டிய (Pre Primary Education) கல்வியைப் பற்றியும் பாதுகாப்பு, ஆரோக்கியம், ஊட்டம், குழந்தைகளுக்கு உணவூட்டுதல் போன்ற பல்வேறு பொருள்களைப் பற்றியும் மேற்கூறிய கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கருத்தரங்கிலே சில தீர்மானங்கள் போடப்பட்டன என்று அறிகிறேன். அந்தத் தீர்மானங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுடைய தன்மையைப் பார்த்தால் 17 சதவிகிதத்தினராக இருக்கிறார்கள். இறப்பு விகிதத்தில் 40 சதவிகிதமாக இந்த வயதுடையவர்கள் இருக்கிறார்கள். இதற்கு அடிப்படையான காரணம் ஊட்டச் சத்து இல்லாததும், சரியான போஷாக்கு இல்லாததும்தான். இதுபற்றியெல்லாம் விரிவாகக் கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டு அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் முறையில் பல நல்ல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

To promote health and nutrition throughout this period with highest priority during the first three years (health objectives)

என்றும்

To adopt measures for development of personality (educational objectives)

என்றும்

To provide suitable home and community environments to ensure security, love, acceptance and understanding (social objectives)

என்றும் மூன்று வகைகளில் வைத்து நிறைவேற்ற வேண்டுமென்று பல்வேறு கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். இவற்றை நடைமுறைப்படுத்த அடிப்படையான நிதிவசதி போதுமானதாக இல்லை. நிதிவசதி பெருகப் பெருக இவற்றை நடைமுறைக்குக் கொண்டுவரலாம். அவை அரசாங்கத்தின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இந்த யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். பள்ளி செல்லும் வயது ஆறு என்று இருப்பது கொஞ்சம் அதிகமாக இருப்பதால், நம்முடைய குழந்தைகள் புத்தி சாலிகளாக இருக்கும் காரணத்தால், பள்ளி செல்லும் வயதை ஐந்து என்று ஆக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆறு வயது அல்ல; ஐந்து வயது முடிய வேண்டுமென்றுதான் வைத்திருக்கிறோம். மேலை நாடுகளில் ஆறு வயது முடியவேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். ஐந்து வயது முடிவதற்கு முன்னால் ப்ரீ ஸ்கூல் முறைகள், கிண்டர்கார்டன் முறைகள் இருக்கின்றன. ஒன்றில் இருந்து மூன்றுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தேக வளர்ச்சி, மூளை வளர்ச்சிக்குப் பயன்படக்கூடிய அளவுக்கு சத்துத் தன்மை பொருந்திருக்கும் உணவுகள் தயாரிக்கப்பட்டு வழங்கும் முறைகள் ஆங்காங்கு மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இந்த வகையில் சீரிய யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். ஐந்து வயது முடிய வேண்டுமென்பதுதான் கணக்கு.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Education whether the authorities who conducted the Seminar have published any Souvenir or special books and the books are available for sale?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இது 'இந்தியன் கவுன்ஸில் ஃபார் சைல்ட் வெல்பேர்' நிறுவனத்தார் நடத்தினார்கள். சென்னைக் கிளையில் அதுபற்றிய குறிப்புகள் இருக்கக்கூடும். தேவையானால் அதை வாங்கிக் கொள்ளலாம்.

DR. H. V. HANDE : What were the results of this Seminar and what are the effects of the Seminar on the Government's policies and Government's programmes, whether the Government have taken stock of the fact that almost every mother and father want to send their children to kindergarten school and there is practically no kindergarten institution run by the Government? May I know in view of these, whether the Government are prepared to start at least a few kindergarten institutions in some important places as a sort of pilot project?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்தக் கருத்தரங்கில் பல்வேறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவும் தனித்தனியாக விரிவான முறையில் அறிக்கைகள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதுபற்றி, உதாரணமாக,

In order to expand the services for the pre-school child it is necessary to develop a suitable administrative and physical infrastructure. There should be sufficient number of pre-school institutions with adequate equipment. To enable health functionaries to reach the largest number of pre-school children, one Primary Health Centre should be provided for 25,000 population and one sub-centre for every 5,000 people. Adequate staffing pattern and sufficient budgetary provision for implementation of programmes is required. Job descriptions of all levels of workers should be clearly defined, keeping in view the quantum of workload and their limitations in execution, education and co-ordination. There should be adequate channels of communications of the field staff with administrative authorities at all levels for effective implementation of the programmes.

என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசு ஆரம்பிக்க வேண்டுமென்று குறிப்பிடப்படவில்லை. தனியார் துறைகளிலும் பொது நன்மை கருதி துவக்குகிறவர்களும் கிண்டர் கார்டன் ஸ்கூல் என்று வைத்திருக்கிறார்கள். அரசு சார்பில் ஆரம்பிப்பது என்பது கடினமானதொன்று. துவக்கப்பள்ளி, உயர் துவக்கப் பள்ளி நிர்வாகமே கடினமாகயிருக்கும்போது அதிலும் அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக்கொள்வது என்பது கடினமாகயிருக்கும். அதுபற்றிய செயற்குறிப்பு அரசிடம் இல்லை. அப்படிப்பட்ட ஸ்கூல்களுக்கு என்கரேஜ்மெண்ட் தர வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.